1984 மார்ச் 26]

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, அரசு நிலத்தைக் கையகப் படுத்துகிறபோது, நிலச் சொந்தக்காரர்கள் 6 பேர்கள் என்று தாசில்தார் அறிவித்ததாக ஆணை எண்ணோடு மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஐந்து பேருக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஒருவருக்குக் கொடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுகிறார்கள். அவர் ஈட்டுத் தொகையைக் கூட்டிக் கேட்டிருந்தால், அந்தப் பணத்தை அப்படியே வைத்துக்கொண்டு, அவருக்குக் கோர்ட் மூலம் தாக்கீது அனுப்பி, அவர் கோரிக்கையைக் கேட்டு, நடவடிக்கை எடுக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். இதில் ஏதாவது தவறு செய்திருந்தால், தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதோடு, உரிமை உடையவர்களுக்குப் பணம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: என்னிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில், குறிப்பிட்ட நிலங்களைப் பொறுத்தவரையில், அவை ஐந்து பேருக்குச் சொந்தம் என்று இருக்கிறது. ஆனால் உறுப்பினர் பேசுகிறபோது, தனித் தாசில்தார் கொடுத்திருக்கிற தகவலின் அடிப்படையில் அது ஆறு பேருக்குச் சொந்தமானது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஆறு பேருக்குச் சொந்தமானதை ஐந்து பேருக்கு மட்டும் கொடுத்திருந்தால், அது நியாயமில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆராய்ந்து பார்த்து தவறான தகவல் கொடுத்திருந்தால், அப்படித் தவறான தகவல்கள் கொடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து நியாயம் கிடைக்க வேண்டிய அந்த ஆறாவது நபருக்கு நியாயம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

2. கவன ஈர்ப்பு

(1) அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலக்கரிப் பற்றாக்குறை காரணமாக பொருளாதார நிலை பாதித்துள்ளது குறித்து.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"இம் மாநிலத்திலுள்ள அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படுகிற நிலக்கரி அதிக அளவில் பற்றாக்குறையாக இருப்பது குறித்தும், அதன்

காரணமாக இம் மாநிலத்தின் பொருளாதார நிலை பாதித்துள்ளது குறித்தும்".

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, விவா அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: அறிக்கையில் கூறியுள்ளபடி நமது மாநிலத்திற்கு மாதத்திற்கு 2.7 லட்சம் டன் நிலக்கரி தேவை. இவ்வளவு தேவையை மாதந் தோறும் இந்தியாவிலிருந்து நாம் பெற முடியாத நிலை இருக்கும்போது, ஏன் இதை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது? இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: வெளிநாட்டிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கு அனுமதி கேட்டு இந்திய அரசுக்கு நாம் கோரிக்கை அனுப்பியிருக்கிறோம். அதுபற்றி முடிவெடுக்க வேண்டுமென்று இருமுறை நானும் மத்திய அமைச்சரைப் பார்த்துப் பேசி வற்புறுத்தியிருக்கிறேன். ஆனால் இன்னும் அனுமதி கிடைக்கவில்லை.

திரு. பா. ரா. தாமஸ்: ஒருவேளை நமக்கு அனுமதி கிடைக்காவிட்டால், நம்முடைய பொருளாதாரம் பாதிக்கப்படுகின்ற நிலையைத் தவிர்க்க நிலக்கரிக்கு மாற்றாக எரி எண்ணெயை உபயோகப்படுத்துவதற்காவது அனுமதிக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை நிர்ப்பந்தப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இரண்டு முறையிலே நடவடிக்கை எடுத்து வருகிறோம். முதலாவது குறைந்த விலையில் எரி எண்ணெயை மத்திய அரசு தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இரண்டாவது எப்படி உணவுப் பண்டங்களை "பப்பர் ஸ்டாக்" ஆக கையிருப்பில் வைத்துக் கொள்கிறோமோ அதுபோல் நிலக்கரியையும் இறக்குமதி செய்து கையிருப்பில் வைத்துக்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். இரண்டும் மத்திய அரசின் ஆய்வில் இருக்கின்றன.

@ 266-267 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.